# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2346/41 - 2023 අගෝස්තු මස 23 වැනි බදාදා - 2023.08.23

*2346/41 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 23 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்***
***3 ஆம் பிரிவின் கீழான கட்டளை***

திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராகிய பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்ட பகுதியையும் அத்தகைய அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் காட்டப்பட்டுள்ள எல்லைகளின் வரையறைகளைக் கொண்டதுமான இப்பகுதியை அபிவிருத்திக்குப் பொருத்தமானதென அபிப்பிராயப்படுவதனால், அத்தகைய பகுதிகளை நகர அபிவிருத்திப் பகுதிகளாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.

**பிரசன்ன ரணதுங்க** (பா. உ.),
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,
17 மற்றும் 18 ஆவது மாடிகள்,
"சுஹுறுபாய", சுபுதிபுர வீதி,
பத்தரமுல்லை,
2023, ஒகத்து 08.

**அட்டவணை**

கஹடகஸ்திகிலிய நகர அதிகாரப் பிரதேசம்

**நிரல் I**

வடமத்திய மாகாணத்தின் அனுராதபுர மாவட்டத்தில் கஹட்டகஸ்திகிலிய பிரதேச செயலாளர் பிரிவினுள் அமைந்துள்ளதுமான இலக்கம் 231, கஹடகஸ்திகிலிய கிழக்கு, இலக்கம் 232, கஹடகஸ்திகிலிய மேற்கு மற்றும் இலக்கம் 230, மஹ மெஸ்ஸலேவ ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்குச் சொந்தமாகும் கஹடகஸ்திகிலிய பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ளதும் நிரல் II இல் விபரிக்கப்படும் அதன் எல்லைகளும் குறியீடுகளினையும் கொண்டமைந்து சூழப்பட்ட முழுப் பிரதேசத்தினை உள்ளடக்கியதாகும்.

**நிரல் II**

**வடக்கு**

இலக்கம் 201, கோக்மாதுவ கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையினையும், இலக்கம் 233, மஹகிரிப்பேவ கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையினை குறுக்கு வெட்டும் ஆரம்ப புள்ளியில் இருந்து இலக்கம் 233, மஹகிரிப்பேவ கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையின் ஊடாக கிழக்குத் திசையினை நோக்கி நோக்கிப் பயணிக்கும்போது சந்திக்கும் கஹடகஸ்திகிலிய-ரத்மல்கஹவெவ-கிவுலேகட வீதியைக் குறுக்குவெட்டி மேலும் கிழக்குத் திசையினை நோக்கிச் செல்லும்போது இலக்கம் 233, மஹகிரிப்பேவ கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையினையும் இலக்கம் 235, மஹகல்கந்தேகம கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையினைக் குறுக்குவெட்டும் புள்ளியிலிருந்து குறித்த எல்லையின் ஊடாக தென்கிழக்கு மற்றும் கிழக்குத் திசையினை நோக்கிப் பயணிக்கும்போது சந்திக்கும் இலக்கம் 232, கஹடகஸ்திகிலிய மேற்கு கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லை மற்றும் இலக்கம் 231, கஹடகஸ்திகிலிய கிழக்கு கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையினை குறுக்குவெட்டும் புள்ளியிலிருந்து இலக்கம் 235, மஹகல்கந்தேகம கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையின் ஊடாக வடகிழக்கு மற்றும் கிழக்குத் திசையினை நோக்கிப் பயணிக்கும்போது சந்திக்கும் புத்தலம்-அனுராதபுரம்-திருகோணமலை வீதியினை குறுக்குவெட்டி மேலும் கிழக்குத் திசையினை நோக்கிப் பயணித்து இலக்கம் 235, மஹகல்கந்தேகம கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையினையும் இலக்கம் 221, மஹவெவ கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையினைக் குறுக்குவெட்டும் புள்ளிவரை.

**கிழக்கு**

கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து இலக்கம் 221, மஹவெவ கிராம அலுவலர் பிரிவு மற்றும் இலக்கம் 220, கோஹோபகஸ்கந்த கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையின் ஊடாக தென்மேற்குத் திசையினை நோக்கிப் பயணிக்கும்போது சந்திக்கும் இலக்கம் 220, கோஹோபகஸ்கந்த கிராம அலுவலர் பிரிவின் தெற்குத் திசை மற்றும் இலக்கம் 215, திவ்வெவ கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையினைக் குறுக்குவெட்டும் புள்ளிவரை.

**தெற்கு**

கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து இலக்கம் 215, திவுல்வெவ கிழக்கு எல்லையின் ஊடாக வடமேற்குத் திசையினை நோக்கிப் பயணித்து இலக்கம் 229, திகன்ஹல்மில்லேவ கிராம அலுவலர் பிரிவின் வடக்குத் திசையின் ஊடாக மேற்குத் திசை யினை நோக்கிப் பயணிக்கும்போது சந்திக்கும் இலக்கம் 229,

நிரல் I

நிரல் II

*திகன்ஹல்மில்லேவ கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லை மற்றும் இலக்கம் 198, பெத்கேவ துலான கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையினை குறுக்குவெட்டும் புள்ளிவரை.*

**மேற்கு**

*கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து இலக்கம் 198, பெத்கேவ துலான கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையின் ஊடாக வடக்குத் திசையினை நோக்கிப் பயணிக்கும்போது சந்திக்கும் புத்தளம்-அனுராதபுரம்-திருகோணமலை பிரதான வீதியினை குறுக்குவெட்டி மேலும் அந்த எல்லையின் ஊடாக வடக்குத் திசையினை நோக்கிப் பயணிக்கும்போது சந்திக்கும் இலக்கம் 198, பெத்கேவ துலான கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லை மற்றும் 201, கொக்மாதுவ கிராம அலுவலர் பிரிவின் தெற்கு எல்லையினைக் குறுக்குவெட்டும் புள்ளியில் இருந்து இலக்கம் 201, கொக்மாதுவ கிராம அலுவலர் பிரிவின் தென்கிழக்கு மற்றும் கிழக்கு எல்லையின் ஊடாக வடக்குத் திசையினை நோக்கிப் பயணிக்கும்போது சந்திக்கும் கொக்மாதுவ குளத்தினை குறுக்குவெட்டி மேலும் வடக்குத் திசையினை நோக்கிப் பயணிக்கும்போது சந்திக்கும் ஆரம்பப் புள்ளிவரை வரையப்பட்ட கோட்டால் சூழப்பட்ட ஒரு பகுதியாகும்.*

EOG *08-0258*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*